[24th September 1958

Zamindari Estates

10-10 a.m. * 509 *Q.*—Sri W. P. A. R. CHANDRASEKARAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state when the Zamindari estates will be brought under the regular administration of the Tahsildars concerned?

The Hon. Sri M. A. MANICKAVELU : The estate areas taken over under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, are being brought under the administrative control of the regular Taluk Tahsildars, as and when ryotwari settlement is introduced in these areas.

Sri W. P. A. R. CHANDRASEKARAN : ஜமீந்தாரி எஸ்டேட் களிலுள்ள நிலவரி அமைப்பையும், நிலவுடைமையின் அத்தாட்சி கொடுக்கும் அமைப்பையும் சீர்திருத்தியமைப்பதற்கும், பாசன வசதிகளைப் பொது மராமத்து இலாகாவின்கீழ் கொண்டு வருவதற்கும்; பாரஸ்டுகளை பாரஸ்ட் டிபார்ட்மெண்டின் கீழ் கொண்டுவருவதற்கும் சர்க்கார் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் என்ன என்று கனம் மந்திரி அவர்கள் அறிவிப்பாரா?

The Hon. Sri M. A. MANICKAVELU : கேள்வி ஒருவிதமாக இருக்கிறது ; உப கேள்வி வேறு விதமாக இருக்கிறது. இதிலே நான் சொன்னேன் ரயத்துவாரி செட்டில்மெண்ட் எல்லாம் அமுலுக்கு வந்தால், அப்பொழுது தாலூகா தாசில்தார்கள் இதை நிர்வகிப்பார் என்று. செட்டில்மெண்ட் எல்லாம் அநேகமாக இரண்டு, மூன்று வருஷங்களில் முடிந்துவிடும். அப்பொழுது சாதாரண ரயத்துவாரி ஏரியாவிலே எப்படி இருக்கிறதோ அதேமாதிரி இங்கேயும் வந்துவிடும்.

Chittar-Pattanamkal Scheme

* 510 *Q.*—Sri M. WILLIAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the investigation of the Chittar-Pattanamkal Scheme has been completed?

The Hon. Sri P. KAKKAN : Only the preliminary investigation of the scheme has been completed.

Sri M. WILLIAM : Will the Government be pleased to take up the work in the course of the Second Five-Year Plan period?

The Hon. Sri P. KAKKAN : In my answer I have already stated that preliminary investigation of the scheme has been completed.

Mr. SPEAKER : The other day some doubt had arisen in respect of the question put by Sri M. P. Subramaniam. Now I have allowed him to speak about it.

Sri M. P. SUBRAMANIAM : It was a question put by Sri Vinayakam.

ஐயா, 20–9–1958 அன்று கனம் உறுப்பினர் திரு. கே. வினாயகம் அவர்கள் 381-ம் எண்ணுள்ள கேள்வியின் மூலமாக " சென்னை ராஜ்ய முதல் அமைச்சர் மூலமாக இந்த அரசாங்கத்திற்கு, கோயமுத்தூர் மாவட்டம், பவானி தாலூகா, சிங்கிப்பேட்டை கிராமத்து ரயத்துக்களிடமிருந்து ஏதாவது புகார் வந்திருக்கிறதா?" என்று கேட்டதற்கு, அமைச்சர் அவர்கள் " இல்லை " என்று பதிலளித்திருக்கிறார்கள். ஆனால், முதல் அமைச்சரிடத்திலே புகார் வந்திருக்கிறது என்பது உண்மை. அந்த